**முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.**

**E.A.No.10/2025**
**in**
**E.P.No.36/2021**
**in**
**OS.No.44/2012**

2025–ம் வருடம் நவம்பர் திங்கள் 20–ம் நாளன்று மனுதாரர் தரப்பு சாட்சியாக ம.சா.1–வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின் படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திருமதி.முத்தமிழ்செல்வி, இருக்கை எழுத்தர் நிலை 1 அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்.** | **: பெருமாள்** | **தொழில்** | **:** |
| **த/பெ.** | **:** | **வட்டம்** | **:** |
| **முகவரி** | **:** | **மதம்** | **:** |
| **ஜாதி** | **:** | **வயது** | **:** |

**முதல் விசாரணை:–**

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். கடந்த 19.03.2025 ம் ஒரு ஏ.கௌஸ்மைதீன், அவரது மனைவி ஜி.நூர்ஜகான் மற்றும் அவர்களது குமாரத்தி ஜி.உறசீன் ஷர்மிளா ஆகியோரிடமிருந்து மனுதாரர் / தடைதாரர் ஏ அட்டவணைச் சொத்தை கிரையம் பெற்றதற்கான கரூர் நெ.1 இணை சார்பதிவக ஆவண எண்.609/2025 ன் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.1. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 28.07.2010 ஆம்

தேதியிட்ட பாப்பாத்தி என்பவரின் பொது அதிகார முகவரான என்.சத்தியசீலன் என்பவரால் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ள கரூர் நெ.1 இணை சார்பதிவகத்தில் ஆவண எண்.1210/2010 கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.2. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 10.12.2008 ஆம் தேதியிட்ட பாப்பாத்தி, சத்தியசீலனுக்கு எழுதி பதிவு செய்துள்ள பொது அதிகார ஆவணம் கரூர் நெ.1 இணை சார்பதிவக ஆவண எண்.1475/2008 ன் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.3. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடத்ந 02.07.2012 ஆம் தேதிய 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்களுக்குள் ஏற்பட்டுள்ள கிரைய ஒப்பந்தத்தின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.4. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடத்ந 10.03.2020 ஆம் தேதிய நீதிமன்றம் 1 ஆம் எதிர்மனுதாரருக்கு கிரையம் செய்த பதிவு கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.5. ஆக குறியீடு செய்யப்படுகிறது. மனுதாரர் / தடைதாரரின் ஆதார் அட்டையின் நகல் ம.சா.ஆ.6. ஆக குறியீடு செய்யப்படுகிறது. இணையவழியில் கடந்த 28.06.2025 ல் எடுக்கப்பட்ட T.S. எண்.684 க்கான வில்லங்கச் சான்று (01.01.1979 முதல் 27.06.2025 வரை) ம.சா.ஆ.7. ஆக குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி உத்திரவாக வேண்டுகிறேன்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN Digitally signed by ELAVAZHAGAN Date: 2025.11.20 18:05:28 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.